# பலூன் விற்பவருடன் 'மோதல்' டிபிகேஎல் ஊழியர்கள் போலீசில் புகார்

கோலாலம்பூர், மார்ச் 30 – கோலாலம்பூர், ஜாலான் துவான்கு அப்துல் ரஹ்மானில் பலூன்களை விற்றவருக்கும் கோலாலம்பூர் மாநகராண்மைக் கழக (டிபிகேஎல்) ஊழியர்களுக்கும் இடையே, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவில் நடந்த 'மோதல்' தொடர்பில் புகார் ஒன்றை தாங்கள் பெற்றிருப்பதை போலீசார் உறுதிப்படுத்தினர்.

அச்சம்பவம் குறித்து டிபிகேஎல் ஊழியர் ஒருவர் போலீசில் புகார் செய்திருப்பதாக, டாங் வாங்கி மாவட்ட போலீஸ் தலைவர் சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் நேற்று தெரிவித்தார்.

சாலை ஓரத்தில், பலூன் விற்றுக் கொண்டிருந்த ஒருவரிடமிருந்து டிபிகேஎல் ஊழியர்கள் பலூன்களை கைப்பற்ற முயன்ற காட்சி அடங்கிய ஒரு நிமிடம் 42 வினாடிகள் கொண்ட ஒரு காணொளியை போலீசார் பார்த்ததாக அவர் தெரிவித்தார்.

"அந்த பலூன்களைக் கைப்பற்ற முயன்றபோது, அந்த பலூன் வியாபாரிக்கும் டிபிகேஎல் ஊழியர்களுக்கும் இடையில் 'மோதல்' ஏற்பட்டது. அதோடு, சாலை ஓரத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்த பலரும் தூண்டுதலில் ஈடுபட்டனர்" என்று நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் சுலிஸ்மி தெரிவித்தார்.

வாக்குமூலங்களைப் பெறுவதற்காக அந்த வியாபாரிகள் அனைவரையும் போலீசார் தேடிக் கண்டு பிடிப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த தனது



அமலாக்க ஊழியர்கள் அனைவரிடமிருந்தும் வாக்குமூலங்களைப் பெறப் போவதாக, டிபிகேஎல் கூறியது.

இந்த விவகாரத்தை விசாரணை செய்து வருவதாகக் கூறிய டிபிகேஎல், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவம் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்த, வழிகாட்டு நெறிமுறைகளை தான் மேம்படுத்தவிருப்பதாகக் கூறியது